சட்டத்தை மீறிய இலங்கை படையினருக்கு எதிராக விசாரணைகளை துரிதப்படுத்த ஐ. நா. வலியுறுத்து

(கொழும்பு)
மனித உரிமை மீறல் தொடர்பான சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆயுதப்படையினருக்கும், பொலிசாருக்கும் எதிரான சட்ட நடவடிக்கை (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 30 இதழ் 31
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13 — 03 — 1993

மனிதஉரிமை மீறல்கள் இலங்கையில் தொடரும்

(ஜெனீவா)
இலங்கையில் உள்நாட்டு போர் தொடர்ந்து நடைபெறுவதால் மனித உரிமை மீறல்கள் அதிகரிக்க வாய்ப்பு உண்டென்று இலங்கைக்குழு ஐ. நா. ஆணைக்குழு முன் (4ம் பக்கம் பார்க்க)

தெரிவுக்குழு மீண்டும் 26ம் திகதி கூடுகிறது

(கொழும்பு)
நாடாளுமன்ற தெரிவுக்குழு மீண்டும் இம்மாதம் 26ம் திகதி கூடுகிறது. தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய யோசனைகளை பரிசீலனை செய்வதற்கு மீண்டும் கூடவுள்ளதா (4ம் பக்கம் பார்க்க)

● பம்பாயில் நேற்று ஒரே நேரத்தில்

13 இடங்களில் குண்டுவெடிப்பு

200 பேர் பலி; ஆயிரம் பேர் காயம்

இந்தியா முழுவதும் உஷார் நிலையில்

(பம்பாய்)

பம்பாயில் நேற்று 90 நிமிட நேரத்துக்குள் இடம்பெற்ற 13 குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 200 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும் 1000 க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இந்தியா முழுவதும் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் ராஜேஷ் பைலட், எஸ். பி. சவான் இருவரையும் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உடன் நிலைமைகளை ஆராய பம்பாய்க்கு அனுப்பிவைத்தார்.

ஏயார் இந்தியா கட்டிடத்தில் வெடித்தகுண்டின் காரணமாக இருபதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலாவது குண்டுவெடிப்பு பம்பாயிலுள்ள பங்குச் சந்தைக் கட்டடத்தில் இடம்பெற்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்டடம் 26 மாடிகளைக் கொண்டதாகும்; இதில் 50 பேர் உயிரிழந்ததாக யூ. என். ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

குண்டு வெடிப்புகளையடுத்து பல கட்டடங்கள் அங்கு தீப்பற்றி எரிந்ததாகவும் தீயை அணைக்க தீயணைப்புப்படையினர் கடுமையாகப் போராடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பம்பாய் நகரின் மத்தியில் உள்ள பங்குமார்கட்டு சந்தைக் கட்டிடத்தில் நேற்று பிற்பகல் 1-40 மணிக்கு முதலாவது குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஏயார் இந்தியக் கட்டிடம், மனேஸ் மார்கட், சிந்திரி பஸார், சென்றல் ஓட்டல், நாயர் ஆஸ்பத்திரி, பேபி ஆஸ்பத்திரி, பம்பாய் பல்கலைக்கழகம், மத்திய பஸ் (4ம் பக்கம் பார்க்க)

பூநகரிபாதை விவகாரம் ஐ. நா. குழு அரசுடன்பேச்சு

(கொழும்பு)
கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய உயர் பிரதிநிதிகள் கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை தொடர்பாக இலங்கை அரசுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பேச்சுவார்த்தைக்கான சகல ஏற்பாடுகளையும் ஐ நா பிரதிநிதிகளும், அரச உயர் அதிகாரிகளும் தற்போது செய்து வருகின்றனர்.

இன்று அல்லது நாளை இப்பேச்சுவார்த்தைகள் இடம்பெறுமென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-இ)

மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)
நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை நல்லூர் மங்கையற்கரசி மக. வித்தியாலயத்தில் மீட்பு நிதி சேகரிப்பு நடைபெறும் என தமிழீழ மீட்பு நிதிப் பிரிவு அறிவித்துள்ளது. (வி)

★ காங்கேசன்துறை ஊடாக

உணவுப்பொருட்கள்விரைவில் யாழ். எடுத்துவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
காங்கேசன் துறைமுகம் மூலம் விரைவில் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இத்துறைமுகத்தில் இரண்டாயிரம் தொன் உணவுப்பொருட்கள் சேகரிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திற்கு உணவுப்பொருள்கள் எடுத்துச்செல்வதற்கு காங்கேசன் (4ம் பக்கம் பார்க்க)

கிளாலி- பூநகரி படகு சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி-பூநகரி படகுசேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று யாழ். மாவட்ட வருவாய் நிதித்துறை பொறுப்பாளர் யோ. தமிழ்குமரன் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்ற உறுப்பினர்

பீற்றர் அல்போன்ஸ் நேற்று மூவரால் கடும் தாக்குதல்!

(சென்னை)
தமிழக சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் திரு. பீற்றர் அல்போன்ஸ் நேற்றுக் காலை சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் வைத்து இனந்தெரியாத மூவரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். விடுதியின் வெளியே வந்த போது அவர் மேற்படி மூவராலும் தாக்கப்பட்டாராம். இவரை தாக்கியவர்கள் (4ம் பக்கம் பார்க்க)

தொப்பிகலகாட்டில் தீவிர ராணுவ தாக்குதல்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளை தேடி அழிக்கும் நோக்குடன் மட்டு. தொப்பிகல காட்டுப்பகுதியில் தீவிர இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவ பேச்சாளர் (4-ம் பக்கம் பார்க்க)

உளவாளிகள்!!!

அவதானமாக இருக்கவும் - - - !
எங்களின் ஒருவராக ஊருக்குள்
அலைவார்கள் எங்களின் தேவைகளை
ஊக்கத்துடன் செய்வார்கள்.

சட்டமன்ற நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு

(சென்னை)
தமிழக சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் நால்வர் நேற்று சட்டமன்றத்தை விட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டதையடுத்து எதிர்க்கட்சிகள் அனைத்தும் நேற்றைய சட்டமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்தன. காங்கிரஸ் உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் தாக்கப்பட்டமை குறித்து சபாநாயகரிடம் உரிமை மீறல் நோட்டிஸ் கொடுக்கப்பட்டதாகவும் (4-ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

வரி விளம்பரம்

கல்தேக்கு விதை

நாற்று மேடைக்கு கல்தேக்கு விதைகள் தேவை ''மில்க்வைற்'' (இ-2958)

இசைக்கருவி திருத்துதல்

(Piano Repairs) பியானோ திருத்துதலும் ஓசை சீர் செய்தலும் மற்றும் இசைக் கருவிகளும் திருத்துபவர் தொடர்பு: T. கணேசன், பிரதான வீதி, மானிப்பாய். (அன்னம்மாள் தேவாலயத்திற்கு அருகாமை) (சி-4013)

விற்பனைக்கு

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். தி. காண்டீபன், கும்பமூலவளை, அளவெட்டி. (இ-4012)

FOLLOWME

ரெலிவிசன், வானொலியில் ஒலிபரப்பாகும் ஆங்கில பாட நிகழ்ச்சி தொடர்புநூலும் வெளிவந்து விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை 16, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (எ-2956)

5-3-93 இல் சனி மாற்றம்

14-4-93 இல் செவ்வாய் மாற்றம், 1-6-93 வரை வியாழ வக்கிரம் என் ஜோதிடம் ரூ 8/50 எங்கும் விற்பனையாகின்றன. ஸ்ரீ வாலாம்பிகா புத்தகசாலை (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் முன்பாக) 616, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-4014)

பயிற்சி

ரெலிவிசன், வீடியோ, டெக் திருத்தம், றீவைண்டிங், ஏயர் கொண்டிசனிங் பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். ஆரம்பம்: 15-03-93 Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவைக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (எ-2950)

மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம். சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை, கொக்குவில். (எ-2955)

பண்டிதமணி நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஏழாவது நினைவு தினம் இன்றாகும்.

இவரது தொண்ணூற்றுநான்காவது பிறந்த தினத்தை எதிர்வரும் யூன் மாதம் 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதற்கு முன்னோடியாகப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் பேச்சுப் போட்டி, பாடசாலை மாணவர்கள் அல்லாதவர்களுக்கிடையில் கட்டுரைப் போட்டி, பண்டிதமணியின் நூல் ஒன்றையும் வெளியிடுவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. (சு)

புலமைப்பரிசில் பரீட்சை:

கூடுதல் புள்ளி பெற்ற மாணவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1991-ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டுஐந்து புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளில் கூடுதல் புள்ளி பெற்ற மாணவர்களின் விபரங்கள் வருமாறு:

சர்வேஸ்வரன் நிருஜா, உடுவில் மகளிர் கல்லூரி 194 புள்ளிகள், சேந்தன் கணேசன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை 193 கௌதமி பாலேகன் (சுதுமலை சின்மயா பாரதி வித்தியாலயம் 193. கிருஷ்ணகுமாரன் கிஷகுமாரன், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை 191, விமலினி கணேசலிங்கம். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை 190, பிரேமிளா சண்முகசுந்தரம், கொழும்புத்துறை இந்து மா. வி 189 பாலசுப்பிரமணியம் மாதங்கி, வட இந்து மகளிர் கல்லூரி 188, அருட்குமரன் கந்தசாமி சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை 187, யாழினி சிவசுப்பிரமணியம், உடுவில் மகளிர் கல்லூரி 187, செந்தூரன் குணரத்தினம் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை 186. (159-இ)

யாழ். பயணிகளுக்கு இந்துஇளைஞர்மன்றம் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வர முடியாது ஆலங்கேணிப்பகுதியில் தங்கியுள்ள யாழ். பயணிகளுக்கு உணவு, பாய், படுக்கை வசதிகளை கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர் மன்றம் கொடுத்துதவி வருகின்றது.

இன்றைய கஷ்டமான காலத்தில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரும் பிரயாணிகள் படும் கஷ்டங்களுக்கு இவர்களின் உதவி ஒரு வரப்பிரசாதமென்று பயணிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தங்களது தன்னலமற்ற சேவை தொடருமென்று கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர் மன்றச் செயலாளர் திரு. எஸ். எஸ். செல்வராசா தெரிவித்துள்ளார். (சு இ)

இராசி பலன்

13-03-1993
சனிக்கிழமை
(தமிழுக்கு மாசி) 30

சஷ்டி பி. இ. 4-38 வரை: விசாகம் பி. இ. 1.54 வரை இராகு காலம் காலை 9-22 முதல் 10-52 வரை, சுபநேரம் மாலை 3-22 முதல் 4-52 வரை. சித்தயோகம்

மேடம்- சந்தோச மிகுதி, காரிய சித்தி, இனசன உதவி.

இடபம்: தர்ம காரியம், பணவரவு, தொழில் சிறப்பு.

மிதுனம்- சொந்தத் தகராறு. மனக்குழப்பம், அலைந்து திரிதல்

கடகம்- நண்பர் கவலை, மதிப்புக்குறைதல், ஆவேசப் பேச்சு

சிங்கம்- களத்திர மகிழ்ச்சி, கடமையுணர்ச்சி, குடும்ப சுகம்.

கன்னி: வயிற்றில் ரோகம், பணியாள் துன்பம், மனச் சுமை.

துலாம்- சயன சுகம், இல்லச் சிறப்பு, புதிய விருந்தினர் வருகை.

விருச்சிகம்- கடும் சினம், தொழில் நஷ்டம், வழித் தொல்லை.

தனுசு- அதிக பிரயாசம், தொழில் வெற்றி, விருந்துண்ணல்.

மகரம்- பயண நன்மை, புத்திரர் பெருமை, இடமாற்றம்

கும்பம்- கருமங்களில் சோம்பல், தொழில்போட்டி, காரியத் தடை.

மீனம்- மனைவியால் துன்பம், குடும்ப வெறுப்பு, விவாதம்.

[illegible]

புதிய தலைவர்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக சி. நவரத்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொ. செல்வரத்தினம், உபதலைவராகவும், கி. தவக்குமார், சி. சிவகுமார், இ. பரமேஸ்வரலிங்கம், ச. செல்வரத்தினம், வ. மதிமநாதன் ஆகியோர் ஏனைய பணிப்பாளர் சபைஉறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (சு)

வர்த்தக

மாணவர் மன்ற மலர் வெளியீடு

(உடுவில்)

ஸ்கந்தா வர்த்தக மாணவர் மன்ற இரண்டாவது மலர் வெளியீடான வணிகநாதம் தி. சிறீதரன் தலைமையில் வெளியிடப்பட்டது.

திரு க. விக்கினேஸ்வரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் கலந்து கொண்டார்.

யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் க. தேவராஜா நூல் அறிமுக உரை நிகழ்த்தினார். (109)

சக்தி மா

நீரழிவு நோயாளர்களுக்கென
விசேடமாகத் தயாரிக்கப்பட்டது
இதில்
குரக்கன் மா. சோயா மா
ஆட்டா மா, அரிசி மா
போன்ற மாவுகளின் கலவை சேர்க்கப்பட்டுள்ளது
இதை அவித்து பிட்டு, இடியப்பம் செய்யலாம்.
இது சத்துணவும் சம உணவுமாகும்.
இது ஓர் அண்ணா தயாரிப்பு
அண்ணா கோப்பிக் கடைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணா தொழிற்சாலை
இணுவில்
(ஏ-2961)

கடலில் மூழ்கி குழந்தை பலி

(நெல்லியடி)

தாயார் சமையலில் ஈடுபட்டிருந்தவேளை, வீட்டிலிருந்து தவழ்ந்து சென்ற பெண் குழந்தை அருகிலுள்ள கடலில் தவறி விழுந்து மரணமானது.

இச்சம்பவம் பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் இடம்பெற்றது. சிவரட்ணம் ராஜினி என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே இவ்விதம் பரிதாபமாக மரணமடைந்தது. (160-இ)

முத்திரை தட்டுப்பாடு நீங்கியது

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலிருந்து 'குமண' கப்பலில் யாழ். தபால் திணைக்களத்திற்கு முத்திரைகளும், வான் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் யாழ் பிரதம தபால் அலுவலகத்திலும் ஏனைய தபாலகங்களிலும் நிலவிய முத்திரைக்கான தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (72)

ஔவையார் விழா

(யாழ்ப்பாணம்)

கந்தர் மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் 2-வது ஆண்டாக ஔவையார் விழா இம்மாதம் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது

அன்றைய தினம் ஔவையார் சம்பந்தமாக மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி நான்கு பிரிவுகளாக நடைபெறும். (சீ)

போட்டி

(புலோலி)

மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை குருபூசை தினத்தை யொட்டி பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (61)

விசேட பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். அம்பாள் வீதி நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நிலையத் தலைவர் திரு. அ. சேந்தரன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் ''இப்பகுதி சிறுவர்களின் கல்வி மேம்பாடு குறித்த புலமைப் பரிசில் திட்டம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக முடிவு செய்யப்படும். (154

கொழும்பில் பிக்கட்டிங்

(கொழும்பு)

சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் நேற்றுமுன்தினம் நண்பகல் கொழும்பு கோட்டை ரயில் நிலயத்திற்கு முன் பிக்கட்டிங் நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டது

ஜனாதிபதி ஆர். பிரேமதாசவுக்கு எதிராக இதில் கோஷங்கள் எழுப்பப்பட்டன

எதிர்வரும் 18ம் திகதி நாடளாவிய ரீதியில் மேற்படி சங்கம் நடாத்தவிருக்கும் சத்தியாக்கிரக போராட்டத்துக்கு பொதுமக்களின் ஆதரவைத் தேடும் விதமாகவே இந்த பிக்கட்டிங் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (இ)

மண்ணெண்ணை விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நாளை 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பங்கீட்டு அட்டைக்கு தலா ஒரு லீற்றர் வீதம் 15 ரூபா விலையில் மண்ணெண்ணை விநியோகிக்கவுள்ளது. (72)

மருத்துவ மனையை தரமுயர்த்த கோரிக்கை

(புலோலி)

மரவெட்டி அம்பன் மகப்பேற்று மருத்துவமனையை கிராமிய வைத்தியசாலையாக தரம் உயர்த்துமாறு இம்மருத்துவமனை அபிவிருத்திச்சபை யாழ் பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகரைக் கேட்டுள்ளது (61)

இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ப. நோ. கூ. சங்கக் கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களின் 1993 மார்ச் மாத ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று சனிக்கிழமை காலை 9-00 மணி முதல் 10-00 மணி வரை, வழக்கம்பரையில் உள்ள தற்காலிகமாக இயங்கி வரும் கிராமிய வங்கிக் காரியாலயத்தில் வழங்கப்படும்.

0 0 0

(கொழும்புத்துறை)

முளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையமும். சிறுவர் பாடசாலை ஆசிரியர்களும் இணைந்து நடத்தும் கண்காட்சியும், கலை விழாவும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கலைவிழாவும் நடைபெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கிராமிய மகளிர் புனர்வாழ்வு அமைப்பின் ஆண்டு விழாவை யொட்டி, விழிப்புலனிழந்தோர் வாழ்வகமும், மகளிர் அமைப்பும் இணைந்து நடத்தும் விழா, உடுவில், ஞானப்பிரகாசம் வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தில் [illegible] தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும்.

0 0 0

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் / பிரதேசச் செயலகப் பிரிவுக்கான தடகளப் போட்டி, இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பிரதேசச் செயலாளர் திரு எஸ். முருகேசம்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இப்போட்டிக்கு. யாழ். மாவட்டச் செயலாளர் திரு து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (61-52)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு 'மெய்யாம் இறைவநூல் ஆகமமே' என்னும் பொருளில் தொடர் சொற்பொழிவு ஆரம்பமாக உள்ளது.

வாரந்தோறும் சனி ஞாயிறு தினங்களில் மாலை 4-30 மணி முதல் 5-30 மணி வரை இடம்பெறவுள்ள இத்தொடர் சொற்பொழிவை, [illegible] ஸ்ரீலஸ்ரீ சை. திருஞானசம்பந்தக் குருக்கள் நிகழ்த்துவார்.

0 0 0

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாச முக்கிய கூட்டம் ஒன்று பருத்தித்துறை பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் இன்று 13ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (52)

இடம் பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள்

(நமது பண்டத்தரிப்பு நிருபர்)

வலி மேற்கு, வலி வடக்கு பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கையால் தங்கள் வசிப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்த பல குடும்பங்கள் வீட்டுவசதியின்மையால் தங்க இடமின்றி மிகுந்த இன்னல்களை அனுபவித்து வருகின்றன.

இவ்வாறு வெளியேறிய சுமார் 50 ஆயிரம் குடும்பங்களில் சுமார் 5 ஆயிரம் குடும்பங்களே அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் கட்டிக்கொடுத்த சிறிய குடிசைகளில் வசித்து வருகின்றனர். ஏனைய குடும்பங்கள் தனியார் வீடுகளிலும், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.

இவ்வாறு வசித்து வரும் பெரும்பாலான குடும்பங்கள் அனுபவித்து வரும் சொல்லொணாக் கஷ்டங்கள் மனதை உருக்குவனவாக இருக்கின்றன. திடீரென ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் அகதிகளாக வெளியேறிய இக்குடும்பங்களில் பல வெளியேறிய அவசரத்தில் தற்காலிகமாக தங்கும் வீடுகளில் இயல்பாக ஏற்படுகின்ற பல்வேறு தொல்லைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

சொந்த வீட்டில் இருந்திருந்தால் விறகுக்கு பஞ்சமில்லை. வீட்டு வளவில் தென்னை மரங்கள் இருந்ததினால் தேங்காய் பணம் செலுத்தி வாங்க வேண்டியதில்லை. இங்கு இடம் பெயர்ந்த இடத்தில் எல்லாம் மிகவும் அதிகரித்த விலைகளில் வாங்க வேண்டியிருப்பதாக அரசாங்க ஊழியரான குடும்பஸ்தர் ஒருவர் வேதனையுடன் கூறினார்.

இவ்வாறுதான் இடம் பெயர்ந்த அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களில் பலர் தாங்கள் எடுக்கும் சம்பளம் ஒரு கிழமைக்குக்கூட செலவழிக்க பற்றாது இருப்பதாகவும் கடன் பட்டும், நகை நட்டுக்களை விற்றும் அரை வயிற்றுடன் பொழுதை கழித்து வருவதாகவும் மிக்க வேதனையுடன் கூறுகின்றார்கள்.

இதேவேளை வீடுதேடி அலையும் குடும்பங்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தற்காலிகமாக தங்கியிருந்த குடும்பங்கள் நாட்செல்ல நாட்செல்ல பிரச்னைப்பட்டுக்கொண்டு தனியாகவே குடித்தனம் நடத்தினால் நல்லது என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு தனியாக வீடு தேடுபவர்களை "தனித்த முகம்" அடிக்க நினைக்கும் சில வீட்டு உரிமையாளர்கள் பல ஆயிரக்கணக்கில் 'அட்வான்சும்' உயர்ந்தளவு வாடகையும் அறவிட்டு வருகின்றனர். வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியை பயன்படுத்தி வீட்டு 'புரோக்கர்கள்' சிலர் பரவலாக செயற்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. 'புரோக்கர் பீஸ்' கட்டணம் என்று நூற்றுக்கணக்கானவர்களிடம் இவர்கள் முற்பணம் பெற்றுக்கொண்டு பின்பு கண்ணில் படாது தலைமறைவாகிவிடுகின்ற சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

இது இவ்வாறு இருக்க இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படுவரும் இலவச நிவாரணம் 1,500 க்குமேல் வருமானம் பெறுபவர்கள் என்று காரணம் காட்டி அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மறுக்கப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் ப. நோ. கூ. சங்கங்கள் "உ" இலக்க பச்சை நிற பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்கு காசுக்கு உணவுப் பொருட்களை வழங்கி வந்தன. தற்போது இதுவும் சரிவர நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. இதனால் இக்குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கின்றதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த வீடுகளில் பொருட்கள், தளபாடங்கள் திருட்டுப்போவதாகவும் தலைமுறை தலைமுறையாக தேடிய சொத்துக்களும் உடமைகளும் பறிபோய்விட்டதாகவும், ஷெல் தாக்குதல்களினாலும் விமானக்குண்டு வீச்சுக்களாலும் வீடுகள், கட்டிடங்கள் பலத்த சேதமடைந்து வருவதாக மிகுந்த கிலேசம் அடைந்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள். (72.சி)

ஈழத்து நூல்கள்
தமிழகம் இறக்குமதி

(கொழும்பு)

இலங்கையில் வெளியாகும் சகல தமிழ் நூல்களையும் தமிழகத்திற்கு இறக்குமதி செய்வதற்கு தமிழக அமைச்சரொருவர் முடிவுசெய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் ஈழத்தின் பல படைப்பாளிகளின் நூல்கள் தமிழக மக்களுக்கு படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதென்றும் கூறப்படுகின்றது. (சு-சி)

யாழ். வர்த்தகரிடம்
கொழும்பில் வழிப்பறி

(யாழ்ப்பாணம்)

வியாபார நோக்கத்துடன் கொழும்புக்குச் சென்ற ஒருவரின் 19,600 ரூபா பணம் இனந்தெரியாதோரால் கத்தி முனையில் பறிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த மாதம் 18ம் திகதி இரவு 9-30 மணியளவில், கொழும்பு புதிய சோனகதெருவில் நடைபெற்றது.

புலோலி கிழக்கில் வசிக்கும் முன்னாள் "ராஜா கோப்பரேசன்" பங்காளரான திரு. இ. நடராசா என்பவரிடமே இத்துணிகர வழிப்பறி செய்யப்பட்டுள்ளது.

பணத்தைப் பறி கொடுத்த இவர் அங்கு வசிக்கும் சில உறவினர்களின் உதவி மூலம், ஒருவாறு வீடு வந்து சேர்ந்துள்ளார். (160-சி)

பாடசாலைகளில்
சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் சைக்கிள் திருட்டுகள் தினமும் நடைபெற்று வருவதாக, பாடசாலை மாணவர்கள் பெரும் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பாக பெண்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் இத்திருட்டுச் சம்பவம் மிக சாதுரியமாக நடைபெறுவதாகவும், பெரும்பாலும் காவலாளர்கள் இல்லாத பாடசாலைகளில் திருடர்கள் தமது கைவரிசையைக்காட்டி வருவதாகவும் கூறப்படுகின்றது.

அண்மையில் யாழ். நகரிலுள்ள பிரபல்யமான ஒரு பாடசாலையில் மாணவிகளின் மூன்று சைக்கிள்கள் ஒரே நாளில் திருடப்பட்டுள்ளது.

இதேபோன்று ஆண்கள் கல்லூரி ஒன்றில் திருடப்பட்ட புதிய சைக்கிளில் திருடன் சிலமணி நேரத்தின் பின்பு யாழ். நகரத்தில் மத்தியில் வீதியாக சென்றுகொண்டிருந்தபோது, சைக்கிளை இழந்த மாணவர், தனது சைக்கிளை இனம்கண்டு திருடனை துரத்திச் சென்று பிடித்து, தமிழீழக் காவல்துறையினரிடம் ஒப்படைத்தார். (வீ-சி)

தவக்கால
நற்சிந்தனை

"அப்பா வானகத்திற்கு எதிராகவும், உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன்". (லூக் 15;18) இறைவனோடு நாம் ஒப்புரவாகுவதற்கு யேசு கூறிய 'ஊதாரிப் பிள்ளையின் உவமை' சிறந்த எடுத்துக்காட்டாகும். மனம் திரும்பும் எந்தப் பாவிக்கும் மன்னிப்பு உண்டு. அவர் மன்னிக்கத் தயாராக இருக்கிறார். என்ற தத்துவத்தை எமக்கு உணர்த்துகிறது. எனவே எமது பாவச் செயல்களுக்காக மனம் வருந்தி அவரோடு ஒப்புரவாகுவோம்.

மோ. தா.

நரசிம்மராவ் அரசின்
பெரும்பான்மை குறையவில்லை

(டில்லி)

இந்திய மத்திய அரசுக்கு ஆதரவு வழங்கிய 11 அண்ணா திராவிட முன்னேற்றக்கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை விலக்கிக் கொண்டதால், மத்திய அரசின் பெரும்பான்மைப்பலம் குறைந்துவிடவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்திய ஆளும் கட்சிக்கு 282 நாடாளுமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சிக்கு அண்ணா தி.மு.க. உட்பட 236 உறுப்பினர்களும் இருக்கின்றார்களென்று செய்திகள் தெரிவிக்கின்றன. (சு-சி)

பாரதீய ஜனதா கட்சி
பேரணிக்கு பதில் கூட்டம்

(சென்னை)

பாரதிய ஜனதாக்கட்சி சென்னையில் எதிர்வரும் 21ம் திகதி நடாத்த உத்தேசிக்கப்பட்டிருந்த பேரணிக்குப்பதிலாக பொதுக்கூட்டம்தான் நடைபெறுமென்று அகில இந்திய பாரதிய ஜனதாக்கட்சியின் உபதலைவர் திரு. ஜெனா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் தமிழக முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் பேரணிக்கு அனுமதி வழங்குவது பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்றும், அப்படி அனுமதித்தால் தமிழகத்தில் வகுப்புக் கலவரங்கள் தோன்றுவதற்கு வாய்ப்புகளுண்டு என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதுவரை பாரதீயஜனதாக் கட்சி பேரணி நடத்துவதற்கு விண்ணப்பிக்கவில்லை என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவானுக்கு எழுதிய பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (சு-சி)

யாழ். மாவட்டத்தில்
15,000 கிராமங்களில்
அபிவிருத்தி திட்டம்

(யாழ்ப்பாணம்)

15,000 கிராமங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் முறையில் யாழ்ப்பாணமாவட்டத்திலும் அமுல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் பிரதேச செயலகங்களினூடாக கிராமஉத்தியோகத்தர் தலைமையில் நடைமுறைப்படுத்தப்படும். ஒவ்வொரு கிராமத்திலும் சமூக சேவை நிறுவனங்கள், பெரியோர் மூலம் அக்கிராமத்தில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்திகள் பற்றித்தீர்மானித்த பின்பு கிராம உத்தியோகத்தர் தலைமையில் மூவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.

சிறு கைத்தொழில்கள், நெசவு, சுண்ணாம்புக் கைத்தொழில், செங்கற்கள்போன்ற கைத்தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இதற்கான பயிற்சியும் வழங்கப்படும். பாலம் அமைத்தல், வீதி புனரமைப்பு, மதகு அமைத்தல் போன்றனவும் இந்தத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

இவற்றைவிடச் சிறு குளங்கள் புனரமைப்பு நீர்ப்பாசன வாய்க்கால் அமைத்தல், விவசாய கிணறு வெட்டல், பழவகை பேணல், கமத்தொழில் உற்பத்தியில் பால் பண்ணை, கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணை, மேலும் கடற்றொழில் என்பனவும் மேற்கொள்ளப்படும். இதற்கான நிதி ஆறு மாதங்களில் யாழ். செயலகத்துக்கு வந்து சேரும். (159-சி)

அரசியலில் மதம் புகுவதை
ஒழித்துக்கட்ட புதிய சட்டம்

(டில்லி)

அரசியலில் மதத்தைப்புகுத்தும் போக்கை ஒழித்துக்கட்டுவதற்கு சட்டம் கொண்டுவரப்படுமென்று இந்தியப்பிரதமர் திரு பி. வி. நரசிம்மராவ் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

மதச்சார்பற்ற ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு இச்சட்டம் அவசியமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக இந்திய அரசியலில் மதவாதம் கலந்து நாட்டில் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (சு-சி)

மறியல்போர்
முடிவுற்றது

(பண்டத்தரிப்பு)

கடந்த மாதம் 17ம் திகதியன்று பண்டத்தரிப்பு பிரான்பற்று 7ம் வட்டார மக்கள் தமக்கு இலவச உலர் உணவு நிவாரணம் வழங்குமாறு கேட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்திற்கு முன்பு மேற்கொண்ட மறியல் போராட்டம் சுமுகமான முறையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து கடந்த புதன்கிழமையன்று முடிவுற்றது.

இதனை அடுத்து நேற்று முன்தினம் மேற்படி அலுவலகம் திறக்கப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளது. (71-72-161-சி)

(இலங்கை அரசின் இந்து சமயக் கலாசார அமைச்சு, 21-2-93ல திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் பொற் கரங்களால் 'ஞானசிரோன்மணி' என்னும் பட்டமளித்தும், அமைச்சர் பி. பி. தேவராசாவினால் பொன்னாடை போர்த்தியும் வித்துவான் வேலனுக்குக் கௌரவம் வழங்கியபோது, அதனை ஏற்காது வித்துவான் வேலன் விடுத்த கவிதை இது.)

★ அரச கௌரவம்
யானிதை ஏற்பதோ?

அகதிக ளாகியே தமிழர்கள் அலையவும்
அன்னந் தண்ணி யிலாதவர் சாகவும்
சகதிகள் சேறுகள் தாண்டி வந்தவர்
சாவினை வழியிலே சந்திக்க நேரவும்
அகமு முருகி என் ஆவி கலங்கிட
அரச கௌரவம் யானிதை ஏற்பனோ?
சகமு முணர்ந்திடும் சான்றோர் உணர்வராம்
சாவினை வென்றவன் 'வேலன்' அறிவையோ.

வித்துவான் வேலன்.

லலித் கட்சியின் உட்பூசல்

சுமுகமாக தீர்க்கப்பட்டது

(கொழும்பு)

லலித்- காமினி கட்சியில் நிலவிவந்த கருத்துமோதல்கள் தீர்த்துவைக்கப்பட்டன.

மேற்படி கட்சியின் தலைமைப் பதவியில் திரு. லலித் அத்துலத் முதலிக்கும் திரு. காமினி திஸநாயக்காவுக்குமிடையில் போட்டி நிலவியதால் கட்சிக்குள் கருத்து மோதல்கள் ஏற்பட்டன.

கட்சியின் தலைவர் தானே என திரு. அத்துலத்முதலி அறிவித்திருந்தார்.

ஆனால் நேற்று மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளையடுத்து திரு. அத்துலத்முதலி தலைமைப்பதவியை விட்டுக் கொடுக்க இணங்கியுள்ளார்.

இதன்படி கட்சியின் தலைமைப்பதவியில் ஒரு வருடத்துக்கு திரு. அத்துலத்முதலியும், அடுத்த வருடத்துக்கு திரு. காமினி திஸநாயக்காவும் மாறிமாறி இருப்பார்கள்.

கட்சிக்குள் நிலவிவந்த கருத்து வேற்றுமைகள் தீர்த்து வைக்கப்பட்டதையடுத்து எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் தமது கட்சி மும்முரமாகப் போட்டியிடும் என திரு. அத்துலத்முதலி தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி திரு. பிரேமதாசா மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எதிரான நடவடிக்கைகள் தமது கட்சிமேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

வீரச்சாவு

(யாழ்ப்பாணம்

இளாலி கடற்பரப்பில் கடந்த 11ம் திகதி சிறிலங்கா படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் துணைப்படை வீரான் வீரவேங்கை சீமான் (இலுப்பைக் கடவை மன்னார்) வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

தமிழக சட்டமன்ற

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் பின் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடைபெருதிருக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சட்டமன்றத்தில் நேற்று கூறினார்.

இச்சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட அ. தி. மு. க. உறுப்பினர் ஒருவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

வாழப்பாடி கண்டனம்

இதற்கிடையில் காங்கிரஸ் உறுப்பினர் மீதான தாக்குதலுக்கு அ. தி. மு. க. வே காரணம் எனவும் இது ஒரு பாஸிச போக்கு என்றும் காவல்துறை செயலிழந்து ஆளும் கட்சியின் கைப்பொம்மையாகி விட்டதாகவும் தமிழக காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி கண்டனம் தெரிவித்துள்ளார். (இ-ரி)

இன்று

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரி நடாத்தும் நாடக அரங்கேற்றமும் கலைநிகழ்ச்சிகளும் இன்று சனிக்கிழமை இரவு 7-00மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

சட்டமன்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அது குறித்து உடனடியாக சபையில் விவாதிக்க வேண்டுமென காங்கிரஸ் உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

இதற்கு சபாநாயகர்மறுப்பு தெரிவிக்கவே சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டதுடன் சபாநாயகரின் இருக்கை நோக்கி சென்று கூச்சலிட்ட காங்கிரஸ் உறுப்பினர்களான திரு. பீற்றர் அல்போன்ஸ், திரு ரங்கநாதன், திரு. செல்வராஜ், திரு. ஞானசேகரன் ஆகியோர் சபையிலிருந்து வெளியேறப்பணிக்கப்பட்டனர். அவர்கள் மறுக்கவே காவலர்கள் நால்வரையும் பலவந்தமாக வெளியேற்றினர்.

இதையடுத்து காங்கிரஸ் உறுப்பினர்களும், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மாக்ஸிய கம்யூனிஸ் கட்சி, எம். ஜி ஆர் அ. தி. மு. க உறுப்பினர்களும் சபையிலிருந்து வெளியேறினர்.

சட்டப்பேரவை வாசலுக்கு அருகே காங்கிரஸ் உறுப்பினர்கள், சர்வாதிகார ஆட்சி ஒழிக, மத்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும், உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லை என மாறிமாறி கோஷமிட்டனர்- பேரவை காவலர் அங்கும் வந்து அவர்களை வெளியேற்றினர். (சி)

சட்டத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைத் துரிதப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை அரசாங்கத்தை கேட்டுள்ளது.

அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற மேற்படி ஆணைக்குழுவின் கூட்டத்தில் இலங்கையிடம் இந்தவேண்டுகோள் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமைகளை மீறிய படையினர் அறிவித்துள்ள விளக்கங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு திருப்தி கொள்ளவில்லையென ஜனாதிபதி திரு பிரேமதாசாவின் சர்வதேசவிவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போதும் பலர் காணாமல் போவது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

பம்பாயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம், மேற்கு பம்பாய் பஸ் நிலையம் உட்பட பல வர்த்தகக் கட்டிடங்களிலும் இந்த குண்டுவெடிப்புகள் அடுத்தடுத்து நிகழ்ந்தது.

குண்டுகள் அடுத்தடுத்துபாரிய கட்டிடங்களில் வெடித்ததினால், தொழிற்சாலைகள், வர்த்தக நிலையங்கள், அரச ஸ்தாபனம் ஆகியவற்றில் வேலை செய்துகொண்டிருந்த அனைத்து ஊழியர்களும் வெளியேவந்து பீதியடைந்த நிலையில் வீதியில் அங்குமிங்கும் ஓடினர். இதனால் வீதிகளில் ஏற்பட்ட சனநெரிசல்களிலும் சிலர் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்கள்.

குண்டுவெடிப்பு நிகழ்ந்தபோது வீதிகளில் சென்று கொண்டிருந்த 30க்கும் மேற்பட்ட வாகனங்கள் தூக்கி வீசப்பட்டதில், இதில் பயணம் செய்தவர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

வீதிகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனங்களில் மறைத்துவைக்கப்பட்ட குண்டுகளே பெரும்பாலும் வெடித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் சர்வதேசரீதியில் நடாத்தப்பட்ட ஒரு சதி என்று உள்துறையமைச்சர் எஸ். பி. சவான் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த பாரிய குண்டுவெடிப்புச் சத்தங்கள், பம்பாயிலிருந்து 10 கிலோ மைல்களுக்கப்பால் கேட்டதாகவும் குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் பம்பாய் நகரில் ஏற்பட்ட பதட்டம் தற்போது ஒரு அளவுக்கு தணிந்துவிட்ட போதிலும், பாரிய கட்டிடங்களிலும், அடுக்கு மாடிக்கட்டிடங்களிலும் மக்கள் தங்குவதற்கு அஞ்சி வீதிகளில் நிற்பதாகவும், இக்கட்டிடங்களில் வேறு குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக குண்டு வெடிப்பு நிபுணர்களும் மோப்பச் சக்தி நாய்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வீ-இ-ரி)

'குமண' கப்பல்

செவ்வாய் புறப்படும்

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் வருகிற செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து அரசாங்க உத்தியோகத்தர்களையும் ஏற்றிக்கொண்டு திருகோணமலைக்கு புறப்படவுள்ளது. பின்னர் திருமலையிலிருந்து சிகிச்சைபெற்ற நோயாளர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்படுவர். மீண்டும் பருத்தித்துறையிலிருந்து நோயாளர்களை ஏற்றிக்கொண்டு குமண திருகோணமலை செல்லும் குமண புறப்பட்டதும் வாதுவை கப்பலிருந்து பொருட்கள் இறக்கும் பணி ஆரம்பமாகும். (159)

யாழ். அரச ஊழியர்களுக்கு

இடர்ப்படி கொடுப்பனவு வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற எல்லா அரச உத்தியோகத்தர்களுக்கும் 1991, 199 -ம் ஆண்டுக்கான இடர்ப்படிக் கொடுப்பனவை வழங்குமாறு ஜனாதிபதி திரு. பிரேமதாசாவை யாழ். அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் கேட்டுக்கொண்டார்.

இவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி இலங்கை வங்கி ஆளுநரிடம் இக்கொடுப்பனவுக்கான செயல் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்படி பணித்துள்ளார்.

இதற்கான கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களை யாழ். செயலக அரச அதிபரைப் பெற்றுத் தரும்படி இலங்கை வங்கி ஆளுநர் கேட்டுள்ளார். ஒவ்வொரு திணைக்களத்திலும் உள்ள கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் உத்தியோத்தர் தொகை 13-9-90-ந் திகதி 37/90 இலக்கமுறை சுற்று நிருபத்தின் அடிப்படையில் ஆறு மாதங்களுக்குத் தேவையென எதிர்பார்க்கப்படும் பணத்தின் தொகை. (161-ரி

“இந்திய மக்கள்மீதுள்ளபாசத்தினால் 12மீனவரைநிபந்தனையின்றி விடுதலை செய்கிறோம்”

- இரா தமிழன்பன்

(யாழ்ப்பாணம்)

“இந்திய அரசு எமக்கும் எமது மக்களுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் தொடர்ச்சியாக துரோகங்களை இழைத்துக் கொண்டே வருகிறது” இவ்வாறு முல்லை. மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா தமிழன்பன் 12 இந்திய மீனவர்களை செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கும் வைபவத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த மாதம் 25-ம் திகதி திசை மாறித் தத்தளித்துக் கொண்டிருந்த 12 இந்திய மீனவர்கள் விடுதலைப்புலிகளால் காப்பாற்றப்பட்டனர். புலிகளால் நன்கு உபசரிக்கப்பட்டு வந்த இவர்கள் கடந்த 10ம் திகதி சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ் வைபவத்தில் செஞ்சிலுவைச்சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட மரியானு ஹொரப்டாப்பிலிடம் இம்மீனவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். முல்லை. மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா. தமிழன்பன் சிறப்புத்தளபதி அன்பு ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய இரா தமிழன்பன் மேலும் பேசுகையில் கூறியதாவது, நாம் இந்தியாவுடன் நட்புறவுடனே வாழ விரும்புகிறோம். இந்திய மக்கள் மீது நாம் கொண்ட பற்று பாசத்தினால் இம்மீனவர்களை நன்கு உபசரித்து எவ்வித நிபந்தனைகளுமின்றி விடுவிக்கிறோம் என்று தெரிவித்தார். (ரி

தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு இனப்பிரச்னைக்கு தீர்வாக தனித்தனி மாகாண சமஷ்டி முறை தெரிவுக்குழுவினால் ஏற்கனவே முன் வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (சு-ரி)

தொப்பிகல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் கூறினார்.

கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த இராணுவ நடவடிக்கைக்கு 'குமண என்னும் பெயரிடப்பட்டிருப்பதாகவும் அந்த பேச்சாளர் மேலும் தெரிவித்தார்

தொப்பிகல காட்டுப்பகுதியை ஊடறுத்து இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

பீரங்கி, மோட்டார் தாக்குதல்களுடன் விமானங்களும் இக்காட்டுப்பகுதியில் பெரும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. - ரி

மனித உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் ஒப்புக்கொண்டுள்ளது.

ஜெனீவாவில் ஐ. நா. வின் மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டம் முடிவடையும் தருணத்திலே இலங்கைக்குழு இவ்வாறு தெரிவித்தது.

ஐ நா. வின் இத்திரவதை தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தான் தயார் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளதுடன் மனித உரிமை மீறல்களைப் பார்வையிட ஐ. நா. பிரதிநிதி ஒருவர் இலங்கைக்கு வர வேண்டும் என்றும் இலங்கை அழைப்பு விடுத்துள்ளது. (ரி

உணவுப் பொருள்

(யாழ்ப்பாணம்)

1992ம் ஆண்டு செப்டம்பர் மாதத்துக்கான மதிய உணவு முத்திரைக்கு சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப்பச்சை அரிசியை விநியோகித்து வருகின்றது. (சு)

காங்கேசன்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறை பாதை திறந்துவிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த உணவுப் பொருட்களை உடனடியாக காங்கேசன் துறைக்கு அனுப்பிவைக்குமாறு அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகத்திற்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. (வீ)

வடபிராந்திய
சுருட்டுத் தொழிலாளர் சங்க
பொதுக்கூட்டமும்
புதிய
நிர்வாகசபைத் தெரிவும்

இடம்: கொக்குவில் இந்துக்கல்லூரி
காலம்: 16 - 03 - 1993 செவ்வாய்
நேரம்: மாலை 2-00 மணி

இக்கூட்டத்திற்கும் நிர்வாகசபைத் தெரிவிற்கும் தமிழீழத்திலுள்ள தமிழ்த்தாய் பெற்றெடுத்த சகல சுருட்டுத் தொழிலாளர்களும் சமூகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகிகள்.

(ஏ-2963)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாருக்காக, யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under licence Number B/10336/B